11T2 **அரையாண்டுப் பொதுத் தேர்வு, டிசம்பர் - 2017**

-----

பதிவு எண் | | | | | | |

**வகுப்பு 11**

காலம்: 2.30 மணி **பொதுத்தமிழ் - இரண்டாம் தாள்** மதிப்பெண்கள்: 90

**(உரைநடை, துணைப்பாடம், இலக்கிய நயம், தமிழாக்கம், மொழித்திறன்)**

**I. பின்வரும் வினாக்களுக்கு ஏற்ற வகையில் விடை எழுதுக::** **20×1=20**

1) மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்து விளங்க வேண்டும்.
**(வாக்கியப் பிழையைத் திருத்துக)**
2) பாலிய விவாஹம் சர்க்காரால் தடை செய்யப்பட்டுவிட்டது.
**(கலப்புநடை தவிர்த்துத் தமிழ்ப்படுத்துக)**
3) விடிகால எந்திருச்சி வெள்ளாம பாக்க போனான்.
**(கொச்சைச் சொற்களை நீக்கி எழுதுக)**
4) உரவு - உறவு **(பொருள் வேறுபாடு அறிக)**
5) பண்டைத் தமிழக மகளிர் தம் கணவன்மார்க்கு பெருமை தேடி தந்தனர்.
**(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டெழுதுக)**
6) ஒற்றுமையே வலிமை தரும்.
**(மேற்காணும் தமிழ்ப் பழமொழிக்கு இணையான ஆங்கிலப் பழமொழியை எழுதுக)**
7) கனை - கணை **(பொருள் வேறுபாடு அறிக)**
8) ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.
**(இனிய தமிழில் எழுதுக)**
9) கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது.
**(மரபுப் பிழைகளை அறிந்து திருத்தி எழுதுக)**
10) 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்' என்பதன் சுருக்கக் குறியீடு தருக.
11) படிக்கும்படிச் சொன்னால் கண்டுக் கொள்ளாமல் இருப்பதா?
**(தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கி எழுதுக)**
12) எங்க பேமலி சுமால் பேமலி. **(நல்ல தமிழில் எழுதுக)**
13) பாலை - பாளை **(மயங்கொலி அறிந்து தொடர் அமைத்திடுக)**
14) பரவை இறையாகப் பயரு வகைகளைத் திண்ணும்.
**(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)**
15) ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது என்று என் தந்தை சொன்னார்.
**(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக)**
16) ஆளமரத்தின் விளுதினைப் பாம்பென்று குறங்கு அஞ்சியது.
**(இத்தொடரில் காணும் பிழைகளைத் திருத்தி எழுதுக)**
17) சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது.
**(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டெழுதுக)**
18) பாட்டாளிகளைப் பாடுவதில் இளங்கோவடிகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி!
**(இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள இலக்கியச்சுவை யாது?)**
19) அவள் வாழ்க்கைப் பள்ளியில் அறிவும் ஒழுக்கமும் கற்றாள்.
**(ஏற்ற வினா அமைக்கவும்)**
20) ஐம்புலன் - **தொகைச்சொல்லை விரித்தெழுதுக**.

**II. பின்வரும் வினாக்களுள் வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 21 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக:** **7×2=14**

21) 'மன்னனின் கற்றோன் சிறப்புடையன்' - எவ்வாறு?
22) பெண்கள் கல்வியில் சிறந்திருப்பதால் விளைவன எவை எனக் கம்பர் குறிப்பிடுகிறார்?
23) மெய்ப்பாடு என்பது யாது?
24) கழுகின் வேந்தனை இராமனும் அனுமனும் புகழ்ந்தது யாங்ஙனம்?
25) சிலப்பதிகாரத்தில் வரும் குடிமக்கள் யாவர்?
26) இளங்கோவடிகள் கோவலனிடம் கண்ட வீரம் யாது?
27) ரோம் நாட்டவர் ஓய்வு நேரத்தை எவ்விதமாகப் பயன்படுத்தினர்?
28) எதனை முதற்கடன் என்று குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகிறார்?
29) நடுகல் என்பது யாது?
30) அன்புநெறி மக்கள் மன்றத்தில் நிலவ கன்பூஷியஸ் கற்றுக்கொடுக்கும் மூலமந்திரம் எது?

**III. பின்வரும் வினாக்களுள் ஏழனுக்கு விடையளிக்கவும்:** **7×3=21**
**40-வது வினாவிற்குக் கண்டிப்பாக விடை தருக.**

31) 'ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ' என்று குகன் கூறியதற்குக் காரணம் என்ன?
32) நலங்கிள்ளியின் படை வீரத்தையும் கொடை வீரத்தையும் எழுதுக.
33) கங்கை வேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த காணிக்கைகளை விளக்குக.

34) பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடவில்லை என்பதனை ஆசிரியர் எவ்வாறு மெய்ப்பிக்கிறார்?
35) உழைப்பால் ஏற்பட்ட உள்ளத்தேய்வை நீக்கும் முறை குறித்து அண்ணா கூறுவன யாவை?
36) அன்புநெறி பற்றி புத்தபிரான் கூறுவன யாவை?
37) மெய்க்கீர்த்தி - குறிப்பு வரைக.
38) கல்வெட்டு வளர்ச்சிக்குச் சமண முனிவர்கள் எவ்வகையில் காரணமாயினர்?
39) அரிதினும் அரிதாய்ப் போய்விட்டதே என்று மறைமலை அடிகள் வருந்திக் கூறுவது யாது?
40) திருமூலர் காட்டும் சமயவழிப்பட்ட கடமைகள் நான்கு யாவை?

**IV. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 7×5=35**

41) 'ஒரு பிரமுகர்' **(அல்லது)** 'தேங்காய்த்துண்டுகள்' கதையைச் சுவை குன்றாமல் ஒரு பக்க அளவில் எழுதுக.

42) 'செங்கமலமும் ஒரு சோப்பும்' என்னும் கதையின் ஒரு பகுதியை நாடகமாக எழுதுக.

**(அல்லது)**

சீதாவுக்கும் அவள் சினேகிதியின் மாமியாருக்கும் இடையில் நடந்த உரையாடலை எழுதுக.

43) 'அற்புதராஜ்' பாத்திரப் படைப்பினை விளக்குக. **(அல்லது)**
'பாலாஜி' பாத்திரத்தை ஆய்க.

44) கைலாசம் தொண்டு செய்து உயர்ந்ததாய் நும் கற்பனைக் கலந்து ஒரு கதை எழுதுக.

**(அல்லது)**

முருகதாசர் சுப்பிரமணியத்திடம் உதவி பெற்று, பிறகு வாழ்வில் உயர்ந்ததாய் ஒரு கற்பனைக் கதை எழுதுக.

45) **பின்வரும் பாடலைப் படித்து ஆசிரியர் குறிப்பு, திரண்ட கருத்து, மையக்கருத்து ஆகியவற்றை எழுதுக:**

இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போல
வட்டமாய் புறாக்கள் கூடி
இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்து மில்லை;
வேறுவேறு இருந்து அருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்கம் இல்லை.

**- நாமக்கல் கவிஞர்** **(அல்லது)**

**பின்வரும் பாடலில் அமைந்துள்ள நயங்களில் ஏதேனும் ஐந்தை (எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம், அணி) மட்டும் விளக்கி எழுதுக:**

ஆக்கம் வேண்டுமெனில் - நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா! ஓயா
துழைக்க வேண்டுமப்பா!
உண்ணும் உணவுக்கும் - இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை - நம்பி
வாழ்தல் வாழ்வாமோ?

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

46) **பழமொழியை விளக்கி, வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.**
பழகப் பழகப் பாலும் புளிக்கும் **(அல்லது)**
சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் **(அல்லது)**
**கீழ்க்காணும் தலைப்பில் (மரபு / புது) கவிதை எழுதுக:**
தொழிலாளி **(அல்லது)** வானவில்

47) **தமிழாக்கம் தருக:**
அ) Pen is mightier than sword.
ஆ) Look before you leap.
இ) Where there is will there is a way.
ஈ) Make hey while the sunshines.
உ) Barking dog seldom bites.

**(அல்லது)**

அ) Village are the back-bone of our country said Gandhiji.
ஆ) Take enough water after meals.
இ) A sudden wind blew out the candle light.
ஈ) Wanted a clerk with three years of experience.
உ) The Government announced some schemes.

---------